ஐஜேகே, புதிய நீதிக் கட்சியிடம் ஆதரவு கோரியது அதிமுக

சென்னை, செப். 9: இடைத்தேர்தலில் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு புதிய நீதிக் கட்சி மற்றும் இந்திய ஜனநாயகக் கட்சி (ஐ.ஜே.கே.) தலைவர்களை அதிமுக குழுவினர் புதன்கிழமை சந்தித்து ஆதரவு கோரினர்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம், திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகுதிகளில் அதிமுக வேட்பாளர்கள் போட்டியிடுவர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதற்கிடையே அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனை செவ்வாய்க்கிழமை இரவு அதிமுக முன்னாள் அமைச்சரும், கட்சியின் துணைப் பொதுச் செயலருமான கே.பி.முனுசாமி, பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன், அமைப்புச் செயலர் ஓ.எஸ்.மணியன் எம்எல்ஏ, அக்ரி கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ உள்ளிட்டோர் சந்தித்துப் பேசினர். அப்போது, பாஜக மூத்த தலைவர் தமிழிசை செளந்தரராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தலைவர்களுடன் சந்திப்பு: தொடர்ந்து, 2-ஆவது நாளாக புதன்கிழமை அதிமுக குழுவினர் புதிய நீதிக்கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம், இந்திய ஜனநாயகக்கட்சித் தலைவர் பாரிவேந்தர் ஆகியோரைச் சந்தித்து அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு கோரினர். இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அதிமுக துணைப் பொதுச் செயலர் கே.பி.முனுசாமி, இடைத்தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு கூட்டணிக் கட்சியினரைச் சந்தித்து ஆதரவு கோரிவருகிறோம்.

அதன்படி, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சித் தலைவர்களையும் சந்தித்து ஆதரவு கோருவோம் என்றார்.

முதல்வரின் உடல் மொழி மனித மாண்புகளுக்கு எதிரானது

சென்னை, செப். 9: முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை கேலிசெய்யும் வகையிலான முதல்வர் ச.ஜோசப் விஜய்யின் உடல்மொழி மனித மாண்புகளுக்கு எதிரானது என விசிக தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலுரை அளித்து, முதல்வர் ச.ஜோசப் விஜய் பேசிய போது, திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலினை கேலி செய்யும் வகையில் அவரது உடல்மொழி அமைந்திருந்ததாகக் கடும் விமர்சனங்கள் எழுந்தன.

முதல்வர் தரப்பில் அது உள்நோக்கம் கொண்டதல்ல என விளக்கம் கூறப்பட்டுள்ளது. எனினும், இதுபோன்ற உடல் மொழிகள் கண்ணியமான அணுகுமுறை மற்றும் மனித மாண்புகளுக்கு எதிரானது.

அரசியல் விமர்சனங்கள் என்பது வேறு; தனிப்பட்ட முறையில் ஒருவரின் தன்மதிப்பைக் காயப்படுத்தும் விமர்சனங்கள் என்பது வேறு. எனவே, முதல்வர் இனிவரும் காலத்தில் தனது உடல்மொழியில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

அதேபோல், மிசா கைது குறித்து எரிசக்தி துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் கூறியது வரலாற்றுப் பிழையாகும். மிசா காலத்து அரச பயங்கரவாதம் எத்தகையது என்பது நாடறியும். அந்தக் கொடிய ஒடுக்குமுறைக்குள்ளான மு.க.ஸ்டாலின் குறித்து முற்றிலும் தவறான கருத்தைப் பதிவு செய்தது கண்டனத்துக்குரியது. அமைச்சர் நிர்மல்குமார் அதைத் திரும்பப் பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் தொல்.திருமாவளவன்.

நல்லாசிரியர் விருது பெற்ற விரிவுரையாளருக்கு பாராட்டு விழா

திருக்குவளை, செப். 9: கீழ்வேளூர் அருகே குருக்கத்தியில் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதுநிலை விரிவுரையாளர் ந. ரவிசங்கருக்கு மாநில நல்லாசிரியர் விருதான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டது.

இதையடுத்து, அவருக்கு பாராட்டு விழா குருக்கத்தியில் புதன்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு நிறுவன முதல்வர் அன்புமுத்து தலைமை வகித்தார். துணை முதல்வர் காமராஜன் வரவேற்றார். விரிவுரையாளர் சின்னப்பராஜ் நன்றி கூறினார்.

மதுராந்தகம், தாராபுரம்: திமுக வேட்பாளர்கள் சுயவிவரம்

சென்னை/திருப்பூர் செப். 9: திமுக சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் (தனி) தொகுதி வேட்பாளராக இ.பரந்தாமனும், தாராபுரம் (தனி) தொகுதி வேட்பாளராக செள.சுகன்யாவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மதுராந்தகம் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இ.பரந்தாமன் (49), பிஏபிஎல் படித்துள்ளார். வழக்குரைஞராக பணிபுரிகிறார். திமுக சட்டத் துறை இணைச் செயலரான இவர், திமுக சார்பில் 2016-இல் பூந்தமல்லி (தனி) தொகுதியில் போட்டியிட்டு 2-ஆவது இடம் பிடித்தார்.

2021-இல் எழும்பூர் (தனி) தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சென்னை எழும்பூரைச் சேர்ந்த, பிரேமா என்ற மனைவி, ஐ.பி.கரிகாலன், ஐ.பி.செழியன் ஆகிய இரு மகன்கள் உள்ளனர்.

தாராபுரம்–செள.சுகன்யா: தாராபுரம் (தனி) தொகுதி திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள செள.சுகன்யா(34) எம்.ஏ.பி.எல். படித்துள்ளார். வழக்குரைஞராகப் பணியாற்றி வருகிறார். 2013-இல் திமுகவில் சேர்ந்த இவர், திருப்பூர் மாவட்ட வழக்குரைஞர் அணி துணை அமைப்பாளராக உள்ளார். தேர்தலில் முதல் முறையாக போட்டியிடுகிறார். இவரது கணவர் மு.மணிவாசகம், விவசாயி. தாராபுரம் ஒன்றிய திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் உள்ளார். இவர்களுக்கு அக்ஷயா (6) என்ற மகள் உள்ளார்.

புதுச்சேரி தட்டாஞ்சாவடி வேட்பாளர் சேது செல்வம்

சேது செல்வம்

புதுச்சேரி, செப்.9: புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் திமுக வேட்பாளராக கு.சேது (எ) சேது செல்வம் (55) போட்டியிடுகிறார். இதற்கான அறிவிப்பை திமுக தலைமை வெளியிட்டுள்ளது.

இத் தொகுதியில் அக். 6 -ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் புதன்கிழமை தொடங்கிய நிலையில், திமுக வேட்பாளராக சேதுசெல்வம் அறிவிக்கப்பட்டுள்ளார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை வெளியிட்டஅறிவிப்பில், புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் சேது (எ) சேது செல்வம் திமுக வேட்பாளராக போட்டியிடுவதாக தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் களப்பணியாற்றி வந்த சேதுசெல்வம் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அண்மையில் நடைபெற்ற பேரவைத் தேர்தலில், இத் தொகுதி தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு 3–ஆம் இடம் பிடித்தார்.

முதல் இடத்தில் வெற்றிபெற்ற என்.ரங்கசாமி (என்.ஆர். காங்கிரஸ்) 10,024, இரண்டாம் இடம் தவெக கூட்டணியில் இடம் பெற்ற விநாயகம் (நேயம் மக்கள் கழகம்) 5,583 வாக்குகள் பெற்றனர். மூன்றாவதாக சேது செல்வம் (சுயே.) பெற்ற வாக்குகள் 3,984. இதற்கு அடுத்த நிலையில் 4–ஆவது இடத்தைப் பெற்றவர் காங்கிரஸ் தலைவர் வெ.வைத்திலிங்கம். அவர் பெற்ற வாக்குகள் 2,990.

பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம்: திட்டத்தை அரசு கைவிட வேண்டும்

சென்னை, செப். 9: போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படும் என்பதால் பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டும் திட்டத்தை அரசு கைவிட வேண்டுமென்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவைக்கு 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய வளாகம் அமைக்கப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்திருந்த நிலையில், பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் கட்டப்பட உள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான 21.37 ஏக்கர் நிலம், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 0.93 ஏக்கர் நிலம், வருவாய்த் துறையில் ஆவணங்கள் இல்லாத 1.20 ஏக்கர் நிலம் உள்பட மொத்தம் 26.36 ஏக்கர் பரப்பளவில் 15 மாடிக் கட்டடமாக புதிய வளாகம் அமைக்கப்படும் என்று செய்தி வெளியாகி உள்ளது.

தமிழகத்துக்கு புதிய தலைமைச் செயலகம் தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும்பட்சத்தில் அப்பகுதியில் மிகப்பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்.

அந்தப் பகுதியில் புகழ்பெற்ற சாந்தோம் தேவாலயம், புகழ்பெற்ற பள்ளிக் கூடங்கள், பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்கள் உள்ளன.

இவற்றுடன் புதிய தலைமைச் செயலகமும் அமைக்கப்பட்டால் அப்பகுதியில் சமாளிக்க முடியாத அளவுக்கு நெரிசல் ஏற்படும்.

எனவே, தொலைநோக்குப் பார்வையுடன் தலைமைச் செயலகம் அமைக்க சென்னைக்கு வெளியில் குறைந்தது 500 முதல் 1,000 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த நிர்வாக நகரத்தை அமைப்பதே சிறந்ததாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

சைடு ட்ராக்கிங் மூலம் பழைய எண்ணெய்–எரிவாயு கிணறுகளில் பக்கவாட்டுக் கிணறுகளை அமைக்க ஓ.என்.ஜி.சி. முயற்சி

மாவட்ட ஆட்சியரிடம் புகார்

மயிலாடுதுறை, செப். 9: மயிலாடுதுறை மாவட்டத்தில் ஓஎன்ஜிசி நிறுவனம் பழைய எண்ணெய் - எரிவாயு கிணறுகளில் சைடு ட்ராக்கிங் மூலம் பக்கவாட்டுக் கிணறுகளை அமைக்க முயற்சிப்பதாக மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்திடம் மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்பினர் செவ்வாய்க்கிழமை புகார் மனு அளித்தனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஓஎன்ஜிசி பல்வேறு இடங்களில் எண்ணெய்-எரிவாயு கிணறுகளை அமைத்துள்ளது. இவற்றில் பல கிணறுகளில் எண்ணெய் வளம் குறைந்துவிட்டதால், கைவிடப்பட்ட கிணறுகளாக அறிவிக்கப்பட்டு பணிகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுவிட்டன.

இந்நிலையில், மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் அருகே ராஜகோபாலபுரம் பகுதியில் அமைந்துள்ள பழைய எண்ணெய் எரிவாயு கிணற்றில் மீண்டும் எண்ணெய்–எரிவாயு எடுக்க ஓஎன்ஜிசி முயற்சிப்பதாகவும், இதற்காக மிகப்பெரிய ராட்சத குழாய்கள் லாரிகள் மூலம் வரவழைக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதாகவும் அப்பகுதி மக்கள் மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்புக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, அக்கூட்டமைப்பு நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட ஓஎன்ஜிசி கிணற்றை அண்மையில் பார்வையிட்டனர்.

இந்நிலையில், மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த.ஜெயராமன் தலைமையில் தமுமுக பொறுப்பாளர்கள் ஓ.ஷேக்அலாவுதீன், பி.எம். பாஸித், மதிமுக மாநில செயலாளர் ப.த.ஆசைத்தம்பி, திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் தெ.மகேஷ் உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்தை நேரில் சந்தித்து புகார் மனு அளித்தனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் பேராசிரியர் த.ஜெயராமன் கூறியது:

ஓஎன்ஜிசி நிர்வாகம் ராஜகோபாலபுரம் கிராமத்தில் கைவிடப்பட்ட எண்ணெய் எரிவாயு கிணற்றில் மராமத்து பணி என்ற பெயரில் துரப்பண பணியை செய்வதாகவும், சைடு ட்ராக்கிங் மெத்தடு என்ற முறையில் பூமியை பக்கவாட்டில் துளையிட்டு சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் ஆழத்துக்கு எண்ணெய் எரிவாயு எடுக்க முயற்சிகள் நடப்பதாகவும் குற்றம் சாட்டினர். பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் நடைபெறும் இந்த முயற்சிகளை மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்து தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இந்த பணிகள் நடைபெறுவதற்கு யாரிடம் அனுமதி பெற்றார்கள் அவ்வாறு ஏதேனும் அனுமதி கடிதம் வைத்திருந்தால் அதனை தங்கள் கூட்டமைப்பினரின் பார்வைக்கும் தெரியப்படுத்த வேண்டும் என மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தினார்.

கூட்டமைப்பினரின் கோரிக்கையை செவிமடுத்த மாவட்ட ஆட்சியர் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் 2–ஆவது நாளாக காத்திருப்புப் போராட்டம்

சீர்காழி, செப். 9: சீர்காழியில் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் நகராட்சி வளாகத்தில் இரண்டாவது நாளாக புதன்கிழமை காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட தென்பாதி, திட்டை ரோடு, இந்திரா நகர், விஎன்எஸ். நகர், திருக்கோளக்கா தெரு , ரயில்வே ரோடு, சிதம்பரம் ரோடு, தாடாளன் கோவில், ஊழியன்காரன் தோப்பு, புதிய பஸ் நிலையம், பழைய பஸ் நிலையம், கீழத்தெரு, கோவிலான் தெரு, அகர திருக்கோளக்கா, தோட்ட மானியம், ஈசானிய தெரு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், உணவு விடுதிகள், குடியிருப்புகள், திருமண மண்டபங்கள், தங்கும் விடுதி உள்ளிட்டைகளில் உள்ள மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை அகற்றும் பணியில் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் சுமார் 70-க்கும் மேற்பட்டோர் நாள்தோறும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு அரசு சார்பில் நாள்தோறும் ஊதியம் ரூ. 540 வழங்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தமிழக அரசு கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கான சம்பளத்தை ரூ. 640 ஆக உயர்த்தி உள்ளதாக கூறப்படுகிறது. உயர்த்தப்பட்ட ஊதியத்தை வழங்கக் கோரி, ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் பணிகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபடுவதும், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் அவர்களை பணிக்கு வர வைப்பதுமாக சீர்காழி நகராட்சியில் இருந்து வந்தது.

இதனிடையே கடந்த பேச்சுவார்த்தையின்படி நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், செவ்வாய்க்கிழமை மீண்டும் தூய்மைப் பணியாளர்கள் தங்கள் காத்திருப்பு போராட்டத்தை தொடங்கினர். இந்த காத்திருப்புப் போராட்டம் 2-ஆவது நாளாக புதன்கிழமையும் தொடர்ந்தது. 70-க்கும் மேற்பட்ட ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேச்சுவார்த்தை நடத்த ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள் யாரும் இல்லை என்பதால், போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால நகரில் பெரும் சுகாதார சீர்கேடு நிலவுகிறது.

முதல்வரைக் கண்டித்து செப்.12–இல் திமுக ஆர்ப்பாட்டம்

சென்னை, செப். 9: முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, மு.க.ஸ்டாலின் ஆகியோரின் தியாகத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் கொச்சைப்படுத்தியதாகக் கூறி மாவட்டத் தலைநகரங்களில் செப்.12-இல் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திமுக சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக தலைமை சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை:

திரையுலக மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து, குழந்தைகளை ஏமாற்றி, போலி வாக்குறுதிகள் அளித்து முதல்வர் விஜய் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறார். அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் திமுக கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று, அதிமுக சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி அவர் முதல்வராகியிருக்கிறார்.

திமுகவையும், 5 முறை முதல்வராக இருந்த கருணாநிதி, முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன், திருமணமாகி 5 மாதத்தில் 23 வயதில் மிசா சட்டத்தில் கைதாக்கப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த மு.க.ஸ்டாலின் ஆகியோரின் தியாகத்தையும் கொச்சைப்படுத்தி பேரவையில் விஜய் பேசிய பேச்சு கண்டனத்துக்குரியது. அரசியல் உலகில் இத்தகைய அருவருப்பான உரையை பேரவை கண்டிருக்காது.

முதல்வரின் பேரவை பேச்சைக் கண்டிக்கும் வகையில், திமுக சார்பில் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் வரும் செப்.12–ஆம் தேதி காலை 10.30 மணியளவில் மாவட்டச் செயலர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Change of Name

I, JAYABAL son of PAKKIRISAMY born on 20.06.1973 residing at Door No.6/166 Gandhi Nagar-1, Pulivalam-610 109, Thiruvarur Taluk, Thiruvarur District in the state of Tamil Nadu, India shall henceforth be known as **JAYABAL** son of **PACKIRISAMY.**

JAYABAL son of PAKKIRISAMY
Thiruvarur, 09.09.2026

Change of Name

I, SALAMATHUNNISHA, (Given name), ABDUL KADER (Sur Name), Date of Birth:10.05.1968, and residing at No:83, RMCR Avenue, Karim Nagar Extension, Puduthurai Road, Karaikal-609602, U.T.of Puducherry, India shall henceforth be called and known as **SALAMATHUNNISHA** (Given name), wife of **ABDUL KADAR** (Sur Name) for all the purposes.

SALAMATHUNNISHA
Karaikal, 09.09.2026

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, முக்குளம்சாத்தனூர், வடக்குதெரு, கதவிலக்கம் 2/460 என்ற முகவரியில் வசித்து வரும் தெய்வசகாயம் அவர்கள் மகன் ஆதார் அட்டை எண்: 5765 9677 8978 சுமார் 56 வயதுடைய **ராஜேந்திரன்** ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில்

உள்ளிக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனது பெயரில் உள்ள அசையா சொத்தின் பாக பாத்திய விடுதலை பத்திரம் ஆவணம் எண் 1132/2008, கடந்த 03–09–2026 அன்று முக்குளம் சாத்தனூர் மெயின்ரோட்டில் கீழே தவறி விழுந்து காணாமல்போய் விட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது 9629540946 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ராஜேந்திரன், த/பெ. தெய்வசகாயம்,
2/460, வடக்குதெரு, முக்குளம்சாத்தனூர், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

A-1998 திருமங்கலம் கூட்டுறவு கட்டிட சங்கம் லிட்.,

68, ஜவஹர்நகர் 4வது தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம் – 625706

சங்கத்திற்கு சொந்தமான காலி இடம் விற்பனைக்கு

A 1998 திருமங்கலம் கூட்டுறவு கட்டிட சங்கத்திற்கு சொந்தமான காலி இடம் மின்னணு ஒப்பந்தப்புள்ளி (E-Tender) முறையில் விற்பனைக்கு விண்ணப்பங்கள் இணைய தளம் மூலம் வரவேற்கப்படுகிறது.

https://tntenders.gov.in

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas SMALL FINANCE BANK

(Formerly Known as Equitas Finance Ltd)

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A வின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு.கலையரசன் C C/O திரு.சின்னதுரை திரு.சின்னதுரை K C/O திரு.கருப்பன் திருமதி.வீரம்மாள் C C/O திரு.சின்னதுரை (அனைவரின் முகவரி: 224, கிழக்குத் தெரு, சித்தநல்லூர், சேமங்கலம், திருவாரூர், தமிழ்நாடு, 611101)	திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், சேமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள, பழைய சர்வே எண் 99/2G மற்றும் புதிய சர்வே எண் 99/2G17-ல் அடங்கிய, 2152 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; எல்லைகள்: வடக்கு: திரு.அய்யக்கண்ணு அவர்களின் சொத்து, தெற்கு: திரு.ரகுநாதன் அவர்களின் சொத்து, கிழக்கு: தெரு, மேற்கு : திரு.மதியழகன் அவர்களின் சொத்து.	ரூ.4,00,000/- ரூ.40,000/- ரூ.10,000/-	30.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETVRUR0391402 27.11.2024 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.2,58,094/- மேலும் 28.11.2024அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (07.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.4,66,555/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்:
சதீஷ் 9940286237 , பவித்ரன் 7708695722 , சந்துரு 9629121731

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 29.09.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

equitas

பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்சர் பளாசா, ஃபேஸ் 2, எண் 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2. தொ.பே: 044-42995000
தொலைநகல்: 044-42995050 www.equitas.bank.in

தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு

எங்களது வங்கி கிளைகளில் நகைக்கடன் வாங்கி சரிவர திருப்பிச் செலுத்தாத அனைவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பு, கடன்களை திரும்பச் செலுத்த வேண்டி பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின், கீழே குறிப்பிடப்பட்ட கடன் எண்கள் நகைகளை கீழ்கண்ட கிளைகளில் குறிப்பிட்ட தேதியில் & நேரத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நேரடி ஏலம் தோல்வியடைந்தால் 16.09.26 அன்று மின்னணு ஏலம் (E-Auction) நடத்தப்படும்.

தேதி: 15.09.2026 நேரம்: காலை 10.00 மணி
இடம்: எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

நகரம்	கிளை	கடன் எண்கள்
திருவாரூர்	திருத்துறைப்பூண்டி	70001269925O/GL1001126618
மயிலாடுதுறை	மயிலாடுதுறை	700012773780/GL1001139678
நாகப்பட்டினம்	வேதாரணியம்	700013326561/GL1001235239 700013560952/GL1001274277 700013560377/GL1001274153
திருவாரூர்	மன்னார்குடி	700013372045/GL1001245877

குறிப்பு: 1. தங்கள் நகைகளை மீட்க நினைக்கும் வாடிக்கையாளர்கள் மொத்த நிலுவைத் தொகையை அடகு வைக்கப்பட்ட வங்கி கிளைகளில் ஏலத்திற்கு முன் செலுத்தி, நகைகளை மீட்கலாம். 2. ஏலம் எடுக்க விரும்புபவர்கள் அடையாள சான்று, வருமான வரி PAN கார்டு, GST எண் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / கம்பெனிகள்) அளிக்க வேண்டும். 3. ரூ.1,00,000 முன் தொகையாக (EMD) ஏலம் ஆரம்பிக்கும் முன் செலுத்த வேண்டும்.

இடம்: நாகப்பட்டினம்
தேதி : 9 செப்டம்பர் 2026

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டாக
அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

புரொபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்

CIN : U74950TN2007PLC062401

அல்-பரக்கா டவர்ஸ், புதிய எண். 10, கே.பி.தாசன் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018.
Ph. 044 - 4231 6425, மெயில் : investor.relations@pcnl.in, இணையதளம்: www.pcnl.in

அறிவிப்பு - 19வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் புத்தகம் மூடுதல்

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் நிறுவனத்தின் **19-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM) புதன்கிழமை 30, செப்டம்பர் 2026 நண்பகல் 12:30 மணிக்கு 'வராஹரி ஹால்', ஹோட்டல் ரமதா பிளாஸா, # 36, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600032** என்ற முகவரியில் நடைபெறும். நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு, 101 மற்றும் 136 மற்றும் அதனுடன் இணைந்து வாசிக்க வேண்டிய நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 18-20க்கு இணங்க, பொது சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 102(1) -ன் படி விளக்க அறிக்கையும் மார்ச் 31, 2026 – ல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் பொதுக்குழு கூட்ட அழைப்பு அறிவிப்பு நிறுவனத்திடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு வாயிலாக கம்பெனியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மின்னணு வாயிலாக (E-mail) அறிவிப்பு அனுப்பும் பணி **08 செப்டம்பர் 2026** அல்லது அதற்கு முன்னர் முடிக்கப்படும்.

இந்த AGM அறிவிப்பு நிறுவனத்தின் இணைய தளத்தில் (www.pcnl.in) கிடைக்கின்றன.

மேற்படி சட்ட விதிகளை கடைப்பிடிக்கும் விதத்தில் தொலைவிலிருந்து மின்னணு முறையில் வாக்குப்பதிவு செய்யும் வசதியை (REMOTE E-VOTING) நிறுவனம் பங்குதாரர்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது. தொலைவிலிருந்து கணினி வாக்குப்பதிவு வழங்கும் அதிகாரப்பூர்வ ஏஜென்சி KFIN டெக்னாலஜி நிறுவனத்தின் சேவை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி சட்டம் மற்றும் விதிகளுக்கு இணங்க பின்வரும் விபரங்கள் வழங்கப்படுகின்றன.

(a). மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிப்பதற்கு உரிய வரம்பு தேதி (CUT OF DATE) **24 செப்டம்பர் 2026** ஆகும். தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்யும் வசதி **27, செப்டம்பர் 2026 (காலை 09.00மணி) முதல் தொடங்கி 29, செப்டம்பர் 2026 (மாலை 05.00மணி)** வரை மூன்று நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும். தாள் வடிவில் அல்லது மின்னணு வடிவில் (DEMAT) பங்குகளை வைத்துள்ள அனைத்து பங்குதாரர்களும் வாக்களிக்கலாம். **29, செப்டம்பர் 2026 அன்று மாலை 05.00 மணிக்குப்பின்** E-வாக்குப்பதிவு செய்யும் வசதி செயல்பாட்டில் இருக்காது.

(b). தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்திடாத பங்குதாரர்கள் தங்களது வாக்குரிமைகளை AGM நடைபெறும் இடத்தில் வாக்கு சீட்டு மூலம் வாக்களிப்பதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும்.

(c). தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்துவிட்ட பிறகும் பங்குதாரர்கள் AGM-ல் பங்கேற்கலாம் ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(d). வரம்பு தேதி அன்று உள்ளபடி நிறுவனத்தால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களை உடைய நபர்கள் மட்டுமே தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு மூலம் அல்லது வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்க உரிமையுடையவர்கள் ஆவர். AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளை ஒரு நபர் வாங்கி உறுப்பினர்களாகி வரம்பு தேதி அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்யும் உரிமையை பயன்படுத்தலாம். KFIN அவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி தங்களது பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெற்றுக்கொள்ளலாம். பங்குதாரர் முன்னதாக KFIN டெக்னாலஜி நிறுவனத்திடம் பதிவு செய்திருந்தால் ஏற்கனவே உள்ள பயனர் பெயர் கடவுச் சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

(e). மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக எந்தவொரு விளக்கமும் தேவைப்படும் உறுப்பினர்கள் திரு. பேரன் S N கமல் கிராந்தி – KFIN Tech அவர்களை தொடர்பு கொள்ளலாம். கட்டணம் இல்லா எண்: 18003094001 அல்லது evoting@kfintech.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் அணுகலாம்.

(f). **நிறுவனத்திடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திடாத பங்குதாரர்கள் / உறுப்பினர்கள் மின்னஞ்சல் மூலம் அறிவிப்புகள் அனுப்புவதற்கு வசதியாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அஞ்சல் மூலமாக தனியாக கடிதம் அனுப்பி தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளலாம் அல்லது investor.relations@pcnl.in என்ற குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பெயர், கணக்கு ஏடு எண், கைபேசி எண் போன்ற விபரங்களை வழங்கி பதிவு செய்து கொள்ளலாம்.**

(g). மின்னணு முறையில் வாக்குப்பதிவு செய்வதற்கான வசதி குறித்து ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், விளக்கங்கள் தேவைப்பட்டால் அவை குறித்து பதிவு அலுவலகத்தில் உள்ள திரு. வசிதுல்லா அவர்களுக்கு மின்னஞ்சல் investor.relations@pcnl.in மூலம் அல்லது தொலைபேசி எண். 044-42316425 மூலம் தெரிவிக்கலாம்.

(h). மின்னணு மற்றும் வாக்குச்சீட்டு வாக்குப்பதிவு நடைமுறைகளை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்காக திரு. N. பாலச்சந்திரன், தொழில் புரியும் கம்பெனி செயலர், சென்னை அவர்கள் ஆய்வாளராக (Scrutinizer) நியமிக்கப்பட்டுள்ளார்.

தேதி: 05.09.2026
இடம்: சென்னை

புரொபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்க்காக
அகமது மீரான், நிர்வாக இயக்குனர், DIN 00094209